

# ஓவியர் சி. டக்ளஸ்

ஜோசப் ஜேம்ஸ்

தமிழில் : சி. மோகன்

1994-96 ஆகிய வருடங்களில் டக்ளஸ் உருவாக்கிய படைப்புகள் மற்றும் பளிங்குச் சிற்பங்களின் கண்காட்சி, சக்ஷி கேலரி - பெங்களூர், அலியான்ஸ் ஃபிரான்சிஸ் - சென்னை, சக்ஷி கேலரி - மும்பை ஆகிய நகரங்களில் நடைபெற்றது. அச்சமயம் வெளியிடப்பட்ட சிறு நூலில் இடம்பெற்ற கட்டுரை.

கேரளாவின் கடற்கரை நகரமான தலசேரியில் பிறந்து வளர்ந்த சி. டக்ளஸ், தன் *20*ஆவது வயதில், *1970*ஆம் ஆண்டு, தென்னிந்தியாவின் முன்னோடி கல்வி நிறுவனமான 'காலேஜ் ஆஃப் ஆர்ட்ஸ் & கிராஃப்ட்ஸ்'இல் சேர்வதற்காக சென்னை வந்துசேர்ந்தார். அந்த சமயத்தில் பள்ளிப் படிப்பை முடித்திருந்ததோடு, விரிவான வாசிப்பும் கொண்டிருந்தார். மேலும், சொந்த ஊரில் மிகவும் மதிப்பு வாய்ந்த ஆசிரியரிடம் சிறிது காலம் ஓவியப் பயிற்சியும் எடுத்துக் கொண்டிருந்தார். அப்போது அவர் மிகுந்த அடக்கமும் கூச்ச சுபாவமும் உள்ளவராக இருந்தார். ஓவியக்கலை சார்ந்த வாழ்க்கை மட்டுமே, வேறெதிலும் தன் மனதைச் செலுத்த முடியாத நிலையில், அவருடைய ஒரே தேர்வாக அமைந்தது. அதுவும் சென்னையில்தான் என்று அவர் முடிவு செய்ததற்கு, கல்லூரியின் சிறந்த பயிற்சிச் சூழலும் ஓவியர் குழுவின் ஒத்தாசையும் அவருடைய மன நிலைக்கும் திறமைக்கும் உதவக்கூடும் என்ற எண்ணமே காரணம்.

தலைப்பிடப்படாதது
தாள் - பேஸ்டல்
1993



அவர் கல்லூரியில் சேர்ந்தபோது கலைக் கல்லூரி பரவசமளிக்கக் கூடியதாகவும், ஆர்வமூட்டக்கூடிய ஆளுமையாளர்கள் நிறைந்த ஓர் இடமாகவும் அமைந்திருந்தது அவருடைய பேறுதான். ஒரு முக்கியமான கலை இயக்கத்தில் அங்கிருந்த ஓவியர்களும் சிற்பிகளும் ஈடுபட்டிருந்த சமயமது. மேலும் அவர்களில் சிலர் தங்கள் கலை வாழ்வின் மிகச் சிறந்த படைப்புகளை உருவாக்கிக் கொண்டிருந்த நேரமது. இந்த இயக்கத்தை முன்னின்று நடத்திய கே.சி.எஸ். பணிக்கர் அப்போதுதான் ஓய்வு பெற்று, தான் உருவாக்கிய சோழமண்டலில் வசிக்கத் தொடங்கினார். டக்ளஸ் தன் கல்லூரி வாழ்வின் இறுதி நாட்களில் சோழமண்டலுக்குக் குடிபெயர்ந்தபோது பணிக்கர் அங்குதான் இருந்தார். கல்லூரி வளாகம், சோழமண்டலம் ஆகிய இரண்டிடங்களிலும் இருந்த படைப்பாளிகளிடமிருந்து அவர் அறிந்துகொண்டதும், தொடர்ந்து அறிந்துகொண்டிருந்ததும்தான் இன்று ஓவியராக அறியப்படும் டக்ளஸை வடிவமைத்தன. அமைதியாகத் தன் முயற்சிகளை மேற்கொண்டபடி, பின்பற்றத்தக்க ஒருவருக்காகவும் அனுகூலமான நேரத்துக்காகவும் டக்ளஸ் காத்திருந்தார். வைத்தியக் காத்தனமான வரைகோட்டாளரும் ஓவியருமான ராமானுஜத்தைக் கல்லூரி வளாகத்திலும் பின்னர் சோழமண்டலிலும் டக்ளஸ் தொடர்ந்து கவனித்தபடி இருந்தார்.

ராமானுஜம் மிக விநோதமானவர் மட்டுமல்ல; கருத்துப் பரிமாற்றத்துக்கு வசப்படாத மனிதரும்கூட. அவர்மீது மிகுந்த மதிப்பும் ஆர்வமும் கொண்டு அவரோடு மிகவும் நெருங்கியிருக்கும் ஒருவரால் கூட அவர் மனம் எப்படி செயல்படுகிறது என்பதுபற்றி எதுவுமே அறிய முடியாது. ஆனால் டக்ளஸைப் பொறுத்தவரை, சற்றே பிசகிய மனநிலையோடும் விந்தையான ஸ்திதியோடும் வரையக்கூடிய ஒரு அபூர்வ சக்தியாக, அவர் எதிர்பார்த்திருந்த ஒருவராக ராமானுஜம் தெரிந்தார். டக்ளஸ் மாணவனாக இருந்தபோது அவர் வரைந்த ஓவியங்களைப் பார்க்கும்போது, ராமானுஜத்தின் நுட்பமான வேலைப்பாடுகளை அவர் எவ்வளவு நெருக்கமாக அவதானித்திருக்கிறார் என்பது தெரியவரும். கோட்டை இயக்கும்விதம் மூலமாகவும், வெகு நுட்பமாக நெருக்கும் விதம் மூலமாகவும் ராமானுஜம் வடிவமைக்கும் தன்மை மிகத் தீவிரமான கிராஃபிக் பாணியிலானது. ராமானுஜத்தின் மேதைமையை வெளிப்படுத்தும் அம்சமிது. இதைத்தான் டக்ளஸ் வசப்படுத்த முயற்சித்தார். இது, சென்னைக் கல்லூரி ஓவியர்கள் ஒரு குழுவாக உருவாக்கிய அகவுணர்வு ரீதியான நீள்கோட்டு வெளிப்பாட்டு உத்தியோடு தொடர்புடையதுதான் என்றாலும், ராமானுஜத்தின் பாணி மிகவும் தனிப்பட்ட ஒன்று. அப்போது ஓர் இயக்கமாக சென்னை ஓவியர்கள் மேற்கொண்ட அந்த ஓவிய பாணியின் பொதுத்தன்மை என்ன வென்றால், தெளிவாக வரையறுக்க முடியாத படைப்புப் பொருள் என்று சொல்லலாம். இவர்களுக்கிடையே படைப்பு முயற்சிகளில் ஈடுபட்ட டக்ளஸினுடைய பார்வையும் அதுவாகவே இருந்தது.

டக்ளஸின் அக்காலத்திய படைப்புகளில் இத்தன்மையிலான அவருடைய உருவகமாக அமைந்தது, சர்ப்பப் பையில் வசிக்கும் சிசு. பிறப்பதற்கு முந்தைய சிசு நிலையில் எவ்வித ஒட்டுதலும் இல்லை; பிரிதலும் இல்லை. கோட்டை இயக்கும் திறனோடும் சகஜமான உருவ வெளிப்பாட்டோடும் அவர் உருவாக்கிய பிரத்யேக புராணமாக அக்காலத்திய அவருடைய சித்திரங்கள் அமைந்திருந்தன.

அவர் சோழமண்டலத்தைத் தன் வசிப்பிடமாக அமைத்துக் கொண்டதன்மூலம் ஒரு முழு நேர ஓவியராக அவரது வாழ்க்கை உறுதிப்பட்டது. அது, வசிக்க ஓர் இடத்தையும், சக ஓவியர்களின் உறுதுணையையும், எல்லோரோடும் இணைந்து ஓவியங்கள் வரைவதற்கான நேரத்தையும், குறைந்தபட்சத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான வருமானத்தையும் அமைத்துக் கொடுத்தது.

தொழில்முறை ஓவியராகச் செயல்படத் தொடங்கியபோது அவருக்கு வயது இருபத்தேழு. அவரைப் போன்ற பிற தொழில்முறைப் படைப்பாளிகளோடு அவர் சகஜமான உறவு கொண்டிருந்தார். ஒரு ஓவியராக அவருடைய வாழ்க்கை முழு வடிவம் பெறும் வகையில், கடினமான தொழில்முறைப் பணிக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பாக அப்போதைய நேரமும் சூழலும் அமைந்திருந்தன.

இதுவரை, படங்களை வரைந்துவிட்டு அதன்பின் அவற்றுக்கு வண்ணமிட்ட டக்ளஸ், இப்போது நேரடியாக வண்ணத்தின் மூலமாகவே படங்களை வரையத் தொடங்கினார். இயங்கும் கோடுகளையும் வண்ணச் சாயைகளையும் லாவகமாக ஒருங்கிணைக்கும் விதம்பற்றி அவர் ஏற்கெனவே அறிந்திருந்ததை, இப்போது தூரிகையின் மூலமாகவும் வண்ணத்தின் பெறுமதிகள் மூலமாகவும் வசப்படுத்துவதில் ஈடுபட்டார். இந்த முயற்சி, படைப்புப் பொருளுக்கும், அதன் சித்திர வடிவத்துக்குமிடையே அவர் ஏற்கெனவே மிக அணுக்கமாகக் கண்டடைந்திருந்தவற்றில் சில மறுபரிசீலனைகளை மேற்கொள்ள நிர்பந்தித்தது. இதன் தொடர்ச்சியாக அவர், அதன் தன்மைகளைப் பிரித்தறிந்து கொள்ளும் வகையில் வண்ணத்தின் விதிமுறைகளையும் வடிவமைப்புகளையும் கட்டமைப்புகளையும் வடிவங்களையும் துல்லியமாகக் கணக்கிட்டறிய விரும்பினார். வடிவற்ற, அச்சுறுத்தும் தன்மைகொண்ட படைப்புப் பொருள் ஒரு பக்கமாகவும், அவருடைய புத்தியின் கட்டளைகள் மறுபக்கமாகவும் சம அளவில் அவரை அலைக்கழித்த போது, அவற்றைக் கருத்தாக்க ரீதியாக ஒருங்கிணைக்க அவர்



கே. சி. எஸ். பணிக்கர்
வார்த்தை - II
துணி - தைலம்
1963

ராமானுஜம்
தாள் - மையும் பூச்சும்
1967





தலைப்பிடப்படாதது
தாள் - நீர் வண்ணம்
1983

முயற்சித்திருந்தால், அச்சமயத்தில் அது ஒரு மகத்தான செயல்பாடாக அமைந்திருக்கும்.

ஆனால், ஒதுங்கிக்கொள்ளும் அவருடைய வழக்கமான சுபாவத்திலேயே அவர் சிக்கிக்கொண்டு விட்டதால், அவருடைய வண்ணம் அவருடைய படைப்புகளுக்கு ஒளியூட்ட அனுமதிக்கவில்லை. ஓவியத்தின் சம்பிரதாய உபாயங்களான குறுக்குச் சட்டங்கள், முக்கோணங்கள், செங்குத்துகள், படுக்கைக்கோடுகள் ஆகியன அவருடைய அப்போதைய சித்திரங்களில் வெறும் லட்சியத் தன்மையோடு எவ்வித நுட்பங்களுமின்றி அமைந்தன. நீண்ட காலத் தோழமையோடு இணைந்திருந்த சக ஓவியர்களிடமிருந்து பிரிந்து, ஐரோப்பாவில் அவர் தங்கியிருந்த ஒன்பது வருடங்களில் இல்லகையான ஓவியங்களே அவரால் வரையப்பட்டன. வெறுமையான மனநிலையில், உணர்வுகளின் எவ்வித உந்துதலுமற்று இவற்றை அவர் வரைந்திருக்க வேண்டும்.

மன அலைக்கழிவும் வலியும் வேதனையும் வெளிநாட்டில் தங்கியிருந்த இறுதிக் கட்டத்தில் டக்ளஸ் வரைந்த ஓவியங்களில் பதிவாகியிருக்கின்றன. ஏதோ ஒரு மனத் தூண்டுதலில், திடீரென அயல்நாட்டு வாசத்தைத் துறந்துவிட்டு சென்னை வந்து சேர்ந்தார். சோழமண்டலத்தில், தனித்திருக்க வேண்டிய நிலையில், தான் அனுபவித்த நிச்சயமற்ற, குழப்பமான மனநிலை குறித்து விரிவாகப் பரிசீலித்தார். திரும்பி வந்து சேர்ந்த சில நாட்களுக்குப் பின், அவருடைய இளமைக் காலத்திய, அகவுணர்வு சீதிமிலான நீர்கோட்டுச் சித்திரங்களின்மீது அவர் கவனம் ஆர்வத்தோடு திரும்பியது. அதனைத் தொடர்ந்து, தெளிவற்ற ஒரு உருவம் அவருடைய சித்திரங்களில் தோன்றத் தொடங்கியது; அது நாளடைவில் வளர்ச்சியும் வடிவமும் பெற்றது. அவருடைய சமீபத்திய தொடர் ஓவியங்கள், தொடக்க காலப் படைப்புகளிலிருந்தும், அதனையடுத்து கிட்டத்தட்ட பத்தாண்டுகளாக மேற்கொண்டிருந்த சுய பரிசோதனை மற்றும் பிரதிபலிப்புகளிலிருந்தும் உருவானவை.

லட்சியப்படுத்துதலானது, ஒன்றுக்கொன்று மாறுபட்ட முரண் நிலைகள் குறித்து தவறான வழியில் இட்டுச் செல்வதோடு ஆளைக் குலைக்கும் தன்மையும் கொண்டது என டக்ளஸ் அறிந்துகொண்டார். ஒழுங்கு - குழப்பம், வெளிச்சம் - இருட்டு, உருவம் - புலம் போன்ற முரண்நிலைகள் நம்முடைய உலக அனுபவத்தில் அவ்விதமாகவே செயல்படுவதில்லை. முரண்நிலைகள் நம்மளவில் லட்சியத் தன்மையானவையே அன்றி அவை விளக்கங்களோ, மதிப்பீடுகளோ அல்ல.

இதுதான் வெளிநாட்டில் புதிய எக்ஸ்பிரஷனிச ஓவியத்தின் வாதமாக அமைந்தது. டக்ளஸ் எண்பதுகளில் வெளிநாட்டில் இருந்த போது இதை வெகு நெருக்கமாகப் பார்த்தறியும் வாய்ப்பு கிடைத்தது. ஒழுங்கற்ற அமைவானது, ஒருங்கமைவையும் தொகுப்பமைவையும் போலவே படத்தன்மை கொண்டது என்பதுதான் அதன் வாதம். எக்ஸ்பிரஷனிசத்தின் தொடக்க அலை இதிலிருந்து உருவானதுதான். லட்சியவாதத்திற்கும் நல்லுணர்வுக்கும் எதிரான இத்தகைய படைப்பாக்க நிருபணங்கள் டக்ளஸின் மனதில் நடுமாற்றத்தையும், அவருடைய இருப்பைப் போலவே நிலைகுலைவையும் ஏற்படுத்தியிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.



எதிரொலி - வீழ்ச்சி
தாள் - அக்ரெலிக் லெட்
1985

லட்சியவாதமும் அறநெறிப்படுத்தலும் ஒரு மோசமான படத்தை உருவாக்குவது போலவே, பாதிப்புக்குள்ளான மனோபாவமும் ஒரு மோசமான படத்தையே உருவாக்கும் என்பதை டக்ளஸ் கண்டு கொண்டிருந்தார். தன்னுடைய படத்தில் மீண்டும் அவர் உருவத்தைக் கொண்டுவர பிரயாசைப்பட்டபோது, இப்பிசகு ஏற்படாத வகையில் கவனம் செலுத்தினார். நாளடைவில் உருவம் தோற்றம் கொள்ளத் தொடங்கியபோது, அவருடைய படங்களில் அது மூடப்பட்டதாகவும் முகமூடி அணிந்ததாகவும் வெளிப்பட்டது. அவர் தன் கல்லூரி நாட்களில் வரைந்த, கர்ப்பப் பையிலிருக்கும் முழு வளர்ச்சியடைந்த சிசுவை நினைவுபடுத்தும் வகையில் அது விநோதமாக அமைந்திருந்தது



உருவட்டம்
துணியில் ஒட்டப்பட்ட
தாள் - கலவை சாதனம்
1995

டக்ளஸினுடைய உருவமானது, தாங்கிக்கொள்ள முடியாத ஒரு ஜீவன். அவருடைய அபரிமிதமான பணிவையும், ஆத்மாவின் மென்மையையும் இந்த உருவத்தில் வெளிப்படுத்துவதன்மூலம் அவர் இதை சாதிக்கிறார். இச்சமயத்தில் அவரிடம் கைகூடியிருந்த கலை நுட்பங்களும், அருமையான வரைதிறனும் முன்னின்று படத்தின் தளத்தைப் புனைவு எல்லைக்குள் அல்லது மறைவிடத்துக்குள் நகர்த்தி விடுகின்றன; அதனுள் அவருடைய வலி நிறைந்த உருவம் அலைந்து திரிந்து வசிக்கிறது. கல்லூரி நாட்களில் அவருடைய உருவம் முதலில் வெளிப்பட்டபோது, சரியான புலமோ ஒட்டுமொத்த வடிவமைப்போ உருவாக்கப்படாத தால் அதற்கென்று ஒரு வெளியை அவரால் அமைக்க முடியாமல் போய்விட்டது. சமீபத்திய வருடங்களில் இத்தகைய தடைகளை அவர் நிவர்த்தி செய்துவிட்டதை அடுத்து, அவருடைய உருவம், பலதரப்பட்ட சூழ்நிலைகளில் வெளிப்பட முடிந்திருக்கிறது.

உருவம் படைக்கும் முரண்நிலைகளை உருவாக்குவதற்காக மேற்கொள்ளப்படும் உருவமும் புலமும், உள்ளும் புறமும், வெளியும் தெளிவற்ற உருவும், உயிருள்ளதும் செயலற்றதும் போன்ற அம்சங்களைத் தொடர்ந்த செயல்பாட்டில் மேம்படுத்துவதோடு மீண்டும் மீண்டும் காலத்துக்குக் காலம் அவற்றில் செயல்பட்டுக்கொண்டே இருக்க வேண்டும். இப்பிரச்சனை மிகத் தெளிவாக ஒவ்வொரு படைப்பாளி முன்னும் எதிர்ப்படுகிறது. அதை எதிர்கொள்ளும் படைப்பாளியினது செயல்திறனின் உத்வேகத்துக்கேற்ப, வெவ்வேறு கட்டங்களின் வழியாக ஒருவித முடிவைப் பெறுகிறது. இவ்விஷயத்தில் டக்ளஸ், கேன்வாஸில் தைலப் பூச்சை மேற்கொள்வதிலிருந்து விடுபட்டு, அதற்குப் பதிலாக சுருட்டிக் கசக்கிய தாளைத் துணியில் பசையால் ஒட்டி, சாக்குக்கட்டி, கிரயான் ஆகியவற்றைக் கொண்டு செயல்படுகிறார். சாம்பல், பிரௌன், கறுப்பு ஆகிய வண்ணங்களையும் அவற்றின் சாயைகளையுமே அவர் பயன்படுத்துகிறார். அவை, படைப்பாக்க முனைப்பின்போது ஆழ்ந்தும் கரைந்தும் ஒரு முடிவை அடைகின்றன. இப்படியான வழிமுறை ஒரு நடுப்புலத்தை அவர் எட்ட உதவுகிறது. எந்த ஒன்றையும் வேறுபடுத்திப் பிரித்துப் பார்க்க முடியாத, சுலபமாக அடைய முடியாத ஒரு சந்தி அது. அங்கு இரவும் இருக்கும், பகலும் இருக்கும். அங்கு, படத்தின் ஒவ்வொரு பகுதியும் அது எந்த அளவு வெளியில் இருக்கிறதோ அந்த அளவு உள்ளும் இருக்கிறது. அங்கு புலத்தைப் போலவே உருவமும் தடையற்று, மிகுந்த உரிமையோடு, படம் முழுமையாக நிறைவடையும்வரை மேலும் மேலும் இயங்குகிறது. டக்ளஸ், தன்னுடைய பிந்தைய படைப்புகளில், இத்தகைய நிறைவான ஒரு செயல்பாட்டினை அடைந்திருப்பதன்மூலம் அவருடைய உருவம் தீர்மானமான ஓவியத் தன்மையைப் பெற்றிருக்கிறது.



தலைப்பிடப்படாதது
தாள் - கலவை சாதனம்
1994



*கனவு*
*செராமிக் சிற்பம்*
*1994*